

தருமபுரி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ரூ.47.88 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம்,நகரப்பகுதியில் ரூ.11 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விடுதி கட்டடம்,வெள்ளாளப்பட்டி பகுதியில் ரூ.1 கோடியே 27 லட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம அறிவு சார் மைய கட்டடம் ஆகியவற்றை அமைச்சர் மருத்துவர். மதிவேந்தன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,இப்பணிகளை தரமாகவும்,விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு வழங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் சதீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தேன்மொழி,ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் சி.முத்துக்குமார் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் முன்னிலையில் அ.பள்ளிப்பட்டி, இருளப்பட்டி, பூணையானூர் ஆகிய பகுதிகளிருந்து அ.தி.மு.க. மற்றும் பா.ம.க.வைச் சேர்ந்த சோனியாகாந்தி, ஐஸ்வர்யா, வித்யா, செண்பகம் உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட பெண்கள்,இளைஞர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். நிகழ்வில் மாநில நிர்வாகி அ.சத்தியமூர்த்தி,மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் பாலமுருகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சர்மா மற்றும் புகழேந்தி ஆசைத்தம்பி, முகமது மிராசா, சாமி,அமுதா, யுவராஜ், ரஜினி உள்ளிட்ட தி.மு.க.வினர் பங்கேற்றனர்.

# நாகை மாவட்டத்தில் நீரில் மூழ்கிய நெற்பயிர்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, அக். 28 -

நாகை மாவட்டத்தில் சாகுபடி செய்த விளைநிலங்களில் வடகிழக்கு பருவமழையினால் நீரில் மூழ்கிய நெற்பயிர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் வட்டம், கருவேலங்கடை கிராமம், கீழ்வேளூர் வட்டம், சின்னதும்பூர் கிராமம், திருக்குவளை வட்டம், திருவாய்மூர் ஆகிய கிராமங்களில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்த கனமழையினால் குறுவை சாகுபடி செய்த விளைநிலங்களில் நீரில் மூழ்கிய நெற்பயிர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத்துறை இயக்குநர் பா.முருகேஷ், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகமேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என். இளையராஜா,

மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் , கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் .நாகை மாலி.தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர் . அ.சிவப்பிரியா, நாகை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ். கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி..மனோகரன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சிக்கல் என். ஆனந்த், சோ.பா.மலர் வண்ணன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அ.பாரி பாலன், கா.சத்தியமூர்த்தி, பெ.முருகானந்தம், எஸ் பால்ராஜ் பாலமுரளி, . சுந்தர், ஒன்றிய துணை செயலாளர் திருநாவுக்கரசு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

ஆய்வின் போது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா சாகுபடி செய்த விவரம் குறித்தும் அவற்றில் அறுவடை முடிவற்ற விவரம் குறித்தும் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தின் போது கேட்டறிந்தார். மேலும், வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கனமழையால் நாகை, திருவாரூர், தஞ்சை, மயிலாடுதுறை மாவட்டம் ஆகிய பகுதிகளில் விளைச்சல் நீரில் மூழ்கியிருக்கின்ற செய்தி அறிந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களையும், வேளாண்மை துறை அதிகாரிகளையும் நேரடியாக பகுதிகளுக்கு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு கூட்டத்தை நடத்தி நெல் விளைகின்ற அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படும் நெல்லினை பாதுகாக்க வேண்டும் எனவும், அதனை உடனடியாக நெல் அரவை ஆலைக்கும், வெளிமாவட்டங்களுக்கும் அனுப்ப வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மூன்று முறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு கூட்டத்தை நடத்தி உள்ளார். அதன் அடிப்படையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரடி நெல் கொள்முதல் நிலை யங்களில் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பருவமழை தீவிரமடைந்து வருவதால், வானிலை சார்ந்த பயிர் ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகள் அனைத்து சமூக, பொது ஊடகங்கள் வாயிலாக முன்கூட்டியே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், பயிர் சேதங்களை கண்காணித்திட மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு நீரில் மூழ்கிய பயிர்களில் சேதம் ஏற்படும் பட்சத்தில், வேளாண்மை மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் இணைந்து பயிர் சேதப் பரப்பினை கூட்டுக்கணக்கெடுப்பு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சியர் வாயிலாக கருத்துரு அனுப்பிட உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பயிர்க் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் பெருமளவில் பதிவு செய்திட களப்பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, நாகை மாவட்டத்தை பொருத்தவரை சுமார் 30,218 ஹெக்டர் பரப்பளவில் குறுவை, சுமார் 22,422 ஹெக்டர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்பட்டு, அதில் சுமார் 15,484 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யப்பட்டுள்ளது. மேலும், சுமார் 14,733 ஹெக்டர் பரப்பளவில் குறுவை சாகுபடி அறுவடை செய்யாமலிருந்த நிலையில் தற்போது இரு தினங்களுக்கு முன்பு பெய்த கன மழையால் குறுவை சாகுபடி செய்து அறுவடை செய்ய வேண்டிய சுமார் 14,733 ஹெக்டர் பரப்பளவு நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது, சம்பா சாகுபடி செய்து வளர்ச்சி பருவத்தில் உள்ள சுமார் 22,422 ஹெக்டர் பரப்பளவு பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது, அதனை பார்வையிட்டு அதற்கான அறிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.


# 28ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2025

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்**
**கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்**
**என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தக்குமார், பூச்சி எஸ். முருகன்**
மகள்கள் : **ஸ்ரீமதி பேபி (எ)** அன்புத்தங்கை **ஸ்ரீமதி வடிவு, ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி**
மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்


## தருமபுரி மாவட்டத்தில் – ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில்

# ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் 3 திட்டப்பணிகள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் நேரில் ஆய்வு செய்தார்!

தருமபுரி, அக்.27-

தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 3 திட்டப் பணிகள் ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், முன்னிலையில் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ரூ.47.88 இலட்சம் மதிப்பீட்டில் 200 கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இவ்விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள்குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரப்பகுதியில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் 250 கல்லூரி மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் சமூகநீதி கல்லூரி மாணவியர் புதிய விடுதி கட்டடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்து, இப்பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு வழங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்விடுதிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் 10 அறைகளும், முதல் தளத்தில் 16 அறைகளும் மற்றும் இரண்டாம் தளத்தில் 16 அறைகளும் என மொத்தம் 42 அறைகளுடன் மாணவியர்கள் தங்கும் அறை கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் ஒரு அறைக்கு 6 மாணவியர்கள் தங்கும் வகையில் தனித்தனி கழிவறை மற்றும் குளியலறை வசதிகளும், அனைத்து அறைகளிலும் ஒவ்வொரு மாணவியருக்கும் தனித்தனி கட்டில் மற்றும் படிப்பதற்காக நாற்காலிகளுடன்கூடிய தனித்தனி மேஜைகள், உணவருந்தும் அறையில் 100 பேர் வரை அமர்ந்து உணவருந்தும் வகையில் மேஜைகளும், சமையலறை, பொருட்கள் வைப்பு அறை மற்றும் RO குடிநீர் வசதி, விடுதி காப்பாளர் அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வெள்ளாளப்பட்டி கிராமத்தில் அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்பு பகுதி மேம்பாடு திட்டம் மற்றும் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் ரூ.127.49 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு மைய கட்டடம் கட்டி முடிக்கப்ப ட்டுள்ளதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார். இக்கிராம அறிவு மைய கட்டிடத்தின் தரைத் தளத்தில் 100 பேர் அமரும் வகையில் திறன் மேம்பாட்டுக்கூடம், திட்ட பொருட்காட்சி அறை, ஆண்கள் மற்றம் பெண்களுக்கான கழிவறை மற்றும் முதல் தளத்தில் 100 பேர் அமரும் வகையில் விவசாயிகள், சுயஉதவிக்குழுக்கள் பயன் பெறும் வகையில் பயிற்சி மையம், ஆலோசனை அறை மற்றும் கணினி அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கவிதா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி. தேன்மொழி, மாவட்ட மேலாளர் தாட்கோ வி.ராமதாஸ், சேலம் தாட்கோ செயற்பொறியாளர் கண்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் அண்மையில் சத்துணவு உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் பணி நியமன ஆணையினை வழங்கினார். உடன் சந்திரசேகர் (குன்னூர்), ஆறுமுகம் (கோத்தகிரி), சிவசங்கர், பிரேம்குமார், லட்சுமி, மகாலிங்கம் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதி, இடையாத்தி ஊராட்சியில் முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தின் கீழ், (வேலாம் பட்டி வெங்கரை) இணைப்புச் சாலை பணியை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி துவக்கி வைத்தார். உடன் தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழனிவேல், பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பழகன், இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் ரூஸ்வெல்ட் மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதி, சூலூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து 9 மினி பேருந்துகளை கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மன்னவன், தேவி மன்னவன் (சூலூர்), புஷ்பலதா ராஜகோபால் (கண்ணம்பாளையம்), கவுதமன் (சூலூர்), சசிகுமார் (மோப்பிரிபாளையம்) உள்பட கழக நிர்வாகிகள், சி.டி.சி. எல்.பி.எப். தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.